**அக்டோபர்:** 10

**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்.**

**வாசிக்க: மத்தேயு** 27:50

ரோம ஆளுநர் பிலாத்து ஆண்டவராகிய இயேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். வீரர்கள் அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். பின்பு அவரைப் பரியாசம்பண்ணி, அவருக்கு உடுத்தின மேலங்கியைக்கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள், நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான், தன்னைக் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம் என்று சிலர் கூறினர்.ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. நம் ஆண்டவராகிய இயேசு, சிலுவையில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.




அநேகருக்கு ஆண்டவருடைய சிலுவை மரணத்தை பார்க்கும் (படிக்கும்) போது, எழுகிற ஒரு கேள்வி; அளவிடமுடியாத அன்பை காட்டியவர், சர்வவல்லமை பொருந்தியராக, சகல அதிகாரமுள்ளவராக இருந்தால் அவர் ஏன் இப்படி அநியாயமாக சிலுவையில் மரிக்க வேண்டும்? இது சாதாரணமான கேள்வியாக இருந்தாலும், இதற்கு நேரடி பதிலை விட கீழே சொல்லுகிற உவமை கதையே சரியான விளக்கம் தரமுடியும். ஒரு பட்டணத்தில் நீதியுள்ள நியாயாதிபதி இருந்தார். அவர் மிக மிக நேர்மையானவர். உயிரே போனாலும் நேர்மை தவறாதவர். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவனை தம் உயிரை போலவே நேசித்தார். ஒருநாள் காவல்துறையினர் கையும் களவுமாக ஒரு குற்றவாளியை பிடித்து வந்து நியாயிதிபதி முன் நிறுத்தினர். அவன் செய்த தவறுக்கு ஆயுள்கைதியாக சிறையிலடைக்க வேண்டும். அந்த கைதி யாருமில்லை; அவருடைய மகன். அவர் மனம் உடைந்தது. அவருடைய நிலைமை; பிள்ளைப்பாசம் தண்டிக்க மறுக்கிறது. நேர்மை குணமோ தண்டிக்காமலிருக்க மறுக்கிறது. இப்போது அவர் என்ன செய்வார்? சொல்லுங்களேன். தண்டனையை கட்டளையிட்டார். பின் இறங்கி வந்து பிள்ளைக்கு பதிலாக நியாதிபதியான தாமே சிறைக்கு சென்று பாசத்தையும், நீதியையும் நிறைவேற்றினார். இதைதான் சர்வவல்லமை பொருந்திய நம் பரலோக தந்தை நம் பாவங்களின் தண்டனையாக சிலுவையில் மரித்தார். அப்படிபட்ட அன்புக்கு நாம் என்ன திருப்பி செய்ய முடியும்?

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8

**<u>ஜெபம்</u>**

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க அன்பிற்கு முன்னால் நாங்க என்ன செய்து எங்கள் அன்பை காட்டமுடியும் தெரியவில்லையப்பா. இதோ என்னை முழுவதுமாக உமக்காக வாழ அர்பணிக்கிறேன். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

